SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

# எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கல்வி நிறுவனம்

(பிரிவு 3 யு ஜி சி சட்டம் 1956ன் கீழ் நிகர்நிலைப் பல்கலைக் கழகம்)

## எஸ்.ஆர்.எம். சட்ட புலம்

# முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி

28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச்-2020

# எஸ்.ஆர்.எம் **அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கல்வி நிறுவனம்**

## எஸ்.ஆர்.எம்.சட்ட புலம் வழங்கும்

### முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கல்வி நிறுவனம் எஸ்.ஆர்.எம் சட்டக்கல்லூரியை, 2014 ஆம் ஆண்டு நிறுவியது.

எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனமானது தனியார் கல்லூரிகளுக்கான தரவரிசை பட்டியலில் முதலிடத்திலுள்ளது.

இது தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவால் அறிவிக்கபட்டது.

மனிதவள மேம்பாட்டு துறையினால் முதல் தர வரிசை கல்லூரி என்ற அங்கீகாரம் பெற்ற எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கல்வி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது

எஸ்.ஆர்.எம் சட்டக்கல்லூரியில் ஆயிரத்தைம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் 47 தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் உள்ளனர்.

இங்கு மூன்று ஆண்டு சட்டப்படிப்பு மற்றும் ஐந்து ஆண்டு சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது,

இங்கு பயிற்றுவிக்கப்படும் பாடங்கள் அனைத்தும் இந்திய வழக்குரைஞர் கழகத்தால் பரிந்துரைக்கப்பட்டதாகும்.

சட்டப்பாடங்களை தவிர அரசியல் அறிவியல், சர்வதேச உறவுகள், இந்திய வரலாறு மற்றும் இதர பாடங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

## பொருளடக்கம்


1. அதிகாரப்பூர்வ அழைப்பு ........ 2
2. வழக்கின் பொருண்மைகள் ........ 4
3. விதிமுறைகள் ........ 7
4. முக்கிய நாட்கள் ........ 12
5. விருதுகள் ........ 13
6. தகவல் ........ 14
7. பதிவுப்படிவம் ........ 15
8. உறுதிப்படிவம் ........ 17
9. போக்குவரத்துப் படிவம் ........ 18

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

**<u>அதிகாரப்பூர்வ அழைப்பு</u>**

எங்களது எஸ்.ஆர்.எம் .சட்டக்கல்லூரியில் வருகின்ற பிப்ரவரி 28-ம் தேதி முதல் மார்ச் 1-ம் தேதி வரை நடைபெறவிருக்கும் முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாத போட்டிக்கு வருகை தர தங்களை அழைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். பங்கு பெற விரும்பும் கல்லூரிகள் பிப்ரவரி 10-ம் தேதி மாலை 5.00 மணிக்குள் மின்னஞ்சல் மூலம் தங்கள் குழுவின் பெயர் மற்றும் தகவல்களுடன் முன்பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். கல்லூரி முதல்வரின் கையொப்பமிட்டு பூர்த்தி செய்யப்பட்ட பதிவிறக்கப்படிவம், வரைவு காசோலையுடன் வருகின்ற பிப்ரவரி 14-ம் நாள் அன்று மாலை 5 மணிக்கு முன் எங்களது கல்லூரியை வந்தடைய வேண்டும்.

முனைவர் கு.ராமசாமி
இயக்குநர்
(ஆசிரியர்கள் (ம) ஆராய்ச்சி)

முனைவர்.சி.சிவகுமார்
முதல்வர் (பொறுப்பு)
எஸ்.ஆர்.எம்.சட்டக்கல்லூரி

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

**வழக்கின் பொருண்மைகள்**

பாகு என்பது மாநிலங்களையும் யூனியன் பிரதேசங்களையும் உள்ளடக்கிய ஒன்றியமாகும். சுதந்திரத்திற்கு முன் பாகுவின் பெரும்பான்மையான பகுதிகள் பிரிட்டிஷ் காலனியின் கீழ் இருந்தன மற்றும் இதர பகுதிகள் சில பேரரசுகளின் கீழ் இருந்தன. சுதந்திரத்திற்கு பின் அனைத்து சுதேச அரசுகளும் பாகு பேரரசின் கீழ் வந்தன. பாகுவின் வடபகுதியில் ஜாம் என்ற பெரும்பான்மை முஸ்லீம் வாழும் பகுதியை ஒரு இந்து அரசர் ஆட்சி செய்தார்.

பஷாக் என்பது பாகுவின் அண்டை நாடாகும். 1998-ல் இஸ்மாயில் என்ற பெயருடைய ஆண் உயர்கல்விக்காக ஜாம்-விற்கு வந்தார். பின் இளங்கலை பட்டம் பெற்று சொந்த ஊருக்கு திரும்பினார். கபாரி என்பது பாகுவின் ஒரு பிராந்தியமாகும். இஸ்மாயில் மறுபடியும் ஜாம்-ற்கு வந்து பின் அங்கிருந்து கபாரிக்கு சென்றார் மற்றும் அவரது பெயரை அகதிகள் பட்டியலில் பதிவு செய்தார். பின் கபாரி-யில் இருக்கும் உள்ளூர் பகுதியில் உள்ள சிறிய நிறுவனங்களில் எழுத்தராகப் பணியை தொடங்கினார்.

இதற்கிடையில் அவரது நுழைவுச் சீட்டு காலாவதியாகி விட்டது. அவர், தான் ஒரு அகதி என்று நினைத்து எந்த அதிகாரியிடமும் அல்லது எந்த நபரிடமும் தெரிவிக்காமல் விட்டுவிட்டார். அவரது முதலாளியும் அவர் பஷாக் நாட்டை சேர்ந்தவர் என்பதை அறிந்திருக்கவில்லை. இரண்டு வருடங்களுக்குப் பின் கபாரி பகுதியை சேர்ந்த லலிதா என்ற இந்துப் பெண்ணை திருமணம் செய்தார். ஆனால் அத்திருமணம் பதிவு செய்யப்படவில்லை. பாகு-வின் ஒரு மாநிலமான கன்டா-வில் விருப்பாவணமாக எழுதி வைத்த சில சொத்துக்களும் உயில் வழி இல்லாத பிற சொத்துக்களும் லலிதாவிடம் இருந்தன. லலிதாவின் தந்தைக்கு கபாரி பிராந்தியத்திலும் சில சொத்துக்கள் இருந்தன.

## முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

2013-ல் லலிதா அவரது கணவருடன் கன்டா-விற்கு இடம் பெயர்ந்து அங்கேயே குடியமர்ந்தார். இஸ்மாயில் மற்றும் லலிதா இருவரும் சேர்ந்து கன்டாவில் தொழில் தொடங்கினர். லலிதா இன்டஸ்டரீஸ் லிமிடெட் என பெயரிடப்பட்ட அந்த நிறுவனம் சிறிது காலத்திலேயே பிரபலமாகி நன்மதிப்பை பெற்று நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மக்களின் ஆதரவைப் பெற்றது. இஸ்மாயில் தனது தயாரிப்புகளை பஷாக்கிற்கு ஏற்றுமதி செய்வதற்காக தனது மனைவியின் பெயரில் லலிதா ஏற்றுமதியாளர் பிரைவேட் லிட் என்ற ஏற்றுமதி நிறுவனத்தை தொடங்கினார். அந்த நிறுவனத்தில் இவரும் ஒரு பங்குதாரர் ஆவார். பஷாக்கில் உள்ள தனது மைத்துனன் முகமது ஷாஜாவை தொடர்பு கொண்டு பஷாக்கில் தொழில் தொடங்குவது பற்றியும் மற்றும் தனது தயாரிப்புகளை பஷாக்-ல் சந்தைபடுத்துவது பற்றியும் கேட்டார். முக்கிய ஏற்றுமதியாக உணவுப்பொருள் பொட்டலங்கள், எஃகு, பதனிடப்பட்ட தோல் பொருட்கள், ஆடை பொருட்கள் குறிப்பாக பட்டு சேலைகள் அங்கு காணப்பட்டது. அவர் வளைகுடா நாடுகளில் தனது பொருட்களை சந்தைப்படுத்துவது பற்றியும் அறிவுறுத்தப்பட்டார்.

முகமது ஷாஜா என்பவரின் நண்பரான கவாத் என்ற நாட்டைச் சேர்ந்த ரஹ்மத்திற்கு பட்டு சேலை சார்ந்த தொழிலில், தரமான பொருட்களையும் குறிப்பாக பட்டு சேலைகளை தனது நாட்டில் இறக்குமதி செய்வதும் அவசியமாக இருந்தது. கவாத்திற்கு தயாரிப்புப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான உடன்படிக்கையில் ரஹ்மத், இஸ்மாயில் இருவரும் ஈடுபட்டனர் மற்றும் அந்த உடன்படிக்கையின் உட்பிரிவில், தரப்பினர்களுக்கிடையே உடன்படிக்கை சாராம்சத்தை பொறுத்து மீறுகை எற்பட்டால் அதற்கான சச்சரவுகளை தீர்த்துக்கொள்ளும் அதிகார வரம்பு பாகு ஒன்றியத்திற்கு உட்பட்டதாகும் என்று கூறப்பட்டிருந்தது. இது இரு தரப்பினருக்கும் தெரிந்த ஒன்றாகும். அவர் வருமான வரியையும் செலுத்தத் தொடங்கினார்.

வணிகப் போட்டி காரணமாக இஸ்மாயில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் இறந்த போது காவல்துறை அதிகாரிகள் குற்றம் நடந்த இடத்திலிருந்து சில இரத்த மாதிரிகள் மற்றும் தலைமுடியை சேகரித்து தேவைப்பட்டால் வருங்காலத்தில் தடயங்களுக்காக பாதுகாப்பாக சேகரித்து வைத்தனர். இஸ்மாயில் மரணம் குறித்து காவல் துறையினர் விசாரணையை தொடங்கினர். பின்னர் இஸ்மாயில் பாகு நாட்டவர் அல்ல என்று சில தகவல்களை சேகரித்தனர். ஆனால் அதற்கான ஆதாரமோ அல்லது சான்றோ எதுவும் இல்லை. பின்னர் இஸ்மாயிலின் இறுதி சடங்குகள் அவரது மதத்தின்படி மேற்கொள்ளப்பட்டன.

## முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

ஒப்பந்த மீறுகைக்கு இழப்பீடு வழங்க ரஹ்மத், லலிதா ஏற்றுமதியாளர் பிரைவேட் லிட்-யிடம் கோரினர். ஆனால் நிறுவனம் அதற்கு பதிலளிக்கவில்லை, ஏனெனில் ரஹ்மத்துடன் நிறுவனம் உடன்படிக்கையில் ஈடுபடவில்லை என்ற காரணத்திற்காக நிறுவனம் பதிலளிக்கவில்லை பல முறை கேட்கப்பட்ட கேள்விகளுக்கு லலிதா ஏற்றுமதியாளர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திலிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை. எனவே, ரஹமத் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக இருந்த இஸ்மாயில் ஒப்பந்தத்தை மீறியதாக லலிதா மற்றும் லலிதா ஏற்றுமதியாளர் பிரைவேட் லிட்-க்கு எதிராக வழக்கு தொடர்ந்தார்.

இதற்கிடையில் லலிதா ஏற்றுமதியாளர் பிரைவேட் லிட் மற்றும் இஸ்மாயில் வரி விவரங்கள், ஆதார் விவரங்கள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களைக் கோருமாறு பாகு-வில் உள்ள தனது நண்பர் ரங்கராஜ் என்பவரிடம் ரஹமத் கேட்டார். தகவல் அதிகாரி வருமான விவரங்களை கொடுத்தார். ஆனால் ஆதார் விவரங்களை கொடுக்க மறுத்துவிட்டார். தகவல் அதிகாரி அளித்த தகவல்களிலிருந்து இஸ்மாயிலுக்கு சொத்து 10 மில்லியனுக்கு அதிகமாக இருப்பதைக் கண்டறிந்தார். அதே சமயம் ரஹ்மத்துக்கு செலுத்த வேண்டிய தொகை 32 இலட்சம் மட்டுமே. இழப்பீடு கோரி சேகரிக்கப்பட்ட தகவல்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ரங்கராஜ் எழுப்பிய கேள்வியில் மற்றும் பிற அதிகாரப்பூர்வமற்ற தகவல்களின் அடிப்படையில், இஸ்மாயில் பாகு வம்சாவழியை சேர்ந்தவர் அல்ல என்பதை தகவல் தொழில்நுட்ப அதிகாரிகள் கண்டறிந்தனர் .மேலும் சம்மந்தப்பட்ட அதிகார வரம்பில் உள்ள காவல் நிலையத்தில் இருந்து இஸ்மாயில் அடையாளம் குறித்த சில தகவல்களை தகவல் தொழில்நுட்பத்துறையினர் பெற்றனர். காவல் அதிகாரிகள் வாய் வழி விசாரணையை மேற்கொண்ட பின்னர் இஸ்மாயில் வெளிநாட்டவர் என்பதைக்கண்டறிந்தனர். ஆனால் அதற்கான சரியான ஆதாரங்கள் இல்லை. இதையடுத்து, ரஹ்மத்தின் வேண்டுகோளின் பேரில், ரங்கராஜ் மீண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் இஸ்மாயில் பாகுநாட்டைச் சார்ந்தவரா அல்லது வெளிநாட்டவரா என்று கேள்வி எழுப்பினார். இஸ்மாயில் ஒரு வெளிநாட்டவர் என்று தகவல் தொழில்நுட்பத்துறை கூறியது. ஆனால் அதற்கான எந்தக்காரணமும் ஆதாரமும் இல்லாமல் இருந்தது. இந்த தகவலை ரஹமத் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

## முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

மேலும் இஸ்மாயிலின் அடையாளம் கண்டுபிடிக்கப்படவேண்டும் என்றும் ரஹமத் நீதிமன்றத்தில் வேண்டினார். இஸ்மாயிலின் அடையாளத்தைக் கண்டறிய காவல் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியது. நீதிமன்றத்தின் வழிக்காட்டுதலின் பேரில், இஸ்மாயிலின் இரத்தக்கறை மற்றும் தலைமுடியின் மாதிரியை அவரது டி.என்.ஏ-வைக் கண்டுபிடிக்க அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்தில் காவல்துறை சமர்ப்பித்தது. இது இஸ்மாயில் மனைவியிடம் தெரிவிக்கப்பட்டது. டி.என்.ஏ. சட்டம் 2019-ன் கீழ் இஸ்மாயில் மற்றும் இஸ்மாயில் குடும்பத்தின் தனியுரிமைக்கு எதிரானது என்பதால் டி.என்.ஏ முறை மூலம் இஸ்மாயில் அடையாளத்தை கண்டுபிடிக்கக்கூடாது என்று இஸ்மாயில் மனைவி தன்னிலை வாதம் எடுத்தார். மேலும் தகவல் தொழில்நுட்பத்துறை, ரங்கராஜுக்கு தகவல்களை வழங்குவதின் மூலம் அரசியலமைப்பின் உறுப்பு 21-யை மீறுவதாகவும், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 81-யை மீறுவதாகவும், அவர் கூறினார்.

ஒப்பந்தமீறுகை ஏற்பட்டுள்ளதாகவும், இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. மேலும் வழங்கப்பட்ட தகவல்கள் சட்டத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவை என்றும் இஸ்மாயிலின் அடையாளத்தைக் கண்டறியும்படியும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. லலிதா உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்தார்.

(குறிப்பு: இந்திய நாட்டின் சட்டங்கள் அனைத்தும் பாகு நாட்டிற்கும் பொருந்தும்)

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

**விதிமுறைகள்**

**1. போட்டி நடக்கும் தேதி மற்றும் இடம்:**

முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி- 2020 பிப்ரவரி மாதம் 28/02/2020 முதல் 01/03/2020 மார்ச் வரை நடக்கவிருக்கிறது.

இப்போட்டியின் வழக்காடு மொழியானது தமிழ், எனவே அனைத்துசுற்றுகளும், வாதுரைகளும் தமிழ்மொழியில் மட்டுமே இருக்கவேண்டும்.

**2. அணியினருக்கான தகுதிகள்:**

1. இப்போட்டிக்கு தகுதியான மாணவர்கள் மூன்றாண்டு சட்டப்படிப்பு அல்லது ஐந்தாண்டு சட்டப்படிப்பு பயின்று வரும் மாணவர்கள் மட்டும் போட்டியில் பங்கு கொள்ள இயலும்.
2. ஒவ்வொரு கல்லூரி / பல்கலைகழகத்திற்கு அதிகபட்சம் **இரண்டு** அணிகள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
3. ஒவ்வொரு அணிக்கும் இரண்டு வழக்காடுபவர்கள் மற்றும் ஒரு ஆராய்ச்சியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
4. போட்டியாளர்கள் வாதிடும்போது (அ) போட்டி நடக்கும் எவ்வித நேரங்களிலும் அவர்களின் அடையாளத்தையோ, அவர்கள் சார்ந்த கல்லூரியின் அடையாளத்தையோ அறிந்து கொள்ளும் வகையில் எவ்விதமான அடையாளத்தையும், அடையாள அட்டைகளையும் பயன்படுத்தக்கூடாது. மீறும் பட்சத்தில் அந்த அணி உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படும்.

**3. அணி பதிவு செய்யும் முறை:**

பதிவுக் கட்டணமாக வரைவு காசோலை ரூபாய்.2,500/- செலுத்தப்பட வேண்டிய முகவரி,

**“DEAN, SRM SCHOOL OF LAW” Payable at Chennai.**

வரைவு காசோலை எந்த காரணத்தினாலும் கண்டிப்பாக திருப்பித் தரப்படமாட்டாது. சென்னையில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்ப வேண்டும். பதிவுக்கட்டணம் செலுத்தாமல் அனுப்பப்படும் பதிவுப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

பதிவு படிவத்தை தபால் மூலம் சமர்ப்பிக்க கடைசிநாள் 14/02/2020.
பதிவு படிவம் மற்றும் வரைவு காசோலை அனுப்ப வேண்டிய முகவரி:

**திருமதி: க. பவானி, உதவிப் பேராசிரியர்**
எஸ்.ஆர்.எம் **சட்டக்கல்லூரி,**
எஸ்.ஆர்.எம் **அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்,**
**காட்டாங்குளத்தூர்**
**செங்கல்பட்டு- 603203.**

4. **<u>சீருடை:</u>**

பங்கேற்பாளர்கள் மாணவ வழக்குரைஞர்க்கு உரிய சீருடையில் மட்டுமே போட்டி நடைபெறும் மாதிரி நீதிமன்ற அறைக்குள் அனுமதிக்கப்படுவர்.

5. **<u>தங்குமிடம் மற்றும் உணவு:</u>**

பங்கு பெறும் அணிக்கு தங்குமிடம் மற்றும் உணவு 28 பிப்ரவரி 2020 முதல் 1 மார்ச் 2020 வரை ஒருங்கிணைப்பாளர்களால் வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு அணிக்கு 3 நபர்கள் மட்டுமே அனுமதிக்கபடுவர்.

6. **அணியில் பங்கேற்பவர்களைத் தவிர மற்றவர்கள் யாரும் அணிகளுக்கான தங்குமிடத்தில் தங்க அனுமதியில்லை.**

**8. வாதுரையின் உள்ளடக்கம்**

**1. அட்டைப்பக்கம்**
**2. வழக்கின் பட்டியல்**
**3. சொற்றொடரின் சுருக்கப்பட்டியல்**
**4. நீதிமன்ற ஆள்வரம்பு**
**5. எழுவினாக்கள்**
**6. சுருக்க வாதுரை**
**7. விரிவான வாதுரை**
**8. இறைஞ்சுதல்**

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

**8.1. வாதுரையின் மதிப்பீடு:**

வாதுரையை மதிப்பிடுவதற்காக போட்டியின் ஒருங்கிணைப்பாளர் குழு அனுபவமிக்க குழு ஒன்றை அமைக்கும்.அந்த குழு வாதுரையை தனித்தனியாக 0-70 வரையிலான மதிப்பெண்களில் மதிப்பிடும். காரணிகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **காரணிகள்** | **மதிப்பெண்கள்** |
|---|---|---|
| 1. | பொருண்மை குறித்த தெளிவு | 10 |
| 2. | வாதுரை ஆராய்ச்சியின் தன்மை | 10 |
| 3. | சட்டப்பகுப்பாய்வு, (சட்ட முதுமொழி, சட்டச்சொற்கள், கோட்பாடுகள்) | 10 |
| 4. | முன் தீர்ப்புகளை கையாளும் முறை | 10 |
| 5. | படைப்பு<br>**1. அட்டைப்பக்கம்**<br>**2. வழக்கின் பட்டியல்**<br>**3. சொற்றொடரின் சுருக்கப்பட்டியல்** | 10 |
| | **4. நீதிமன்ற ஆள்வரம்பு** | 5 |
| | **5. எழுவினாக்கள்**<br>**6. சுருக்க வாதுரை**<br>**7. விரிவான வாதுரை** | 10 |
| | **8. இறைஞ்சுதல்** | 5 |
| | **மொத்தம் மதிப்பெண்கள்** | 70 |

**8.2. அபராதம்:**

அபராதமானது எதிர்மறை மதிப்பெண்களாக பின்வருமாறு வழங்கப்படும்.

1. குறிப்பிட்ட நேரத்தில் வாதுரையை சமர்ப்பிக்கதவறினால் 2 மதிப்பெண்கள் தலா ஒரு வாதுரைக்கு முதல் 12 மணி நேரத்திற்கு குறைக்கப்படும் மற்றும் 1 மதிப்பெண் தலா ஒவ்வொரு ஆறு மணி நேரத்திற்கு குறைக்கப்படும்.
2. தவறான அட்டைக்கு 1 மதிப்பெண் தலா ஒரு வாதுரைக்கு குறைக்கப்படும்.
3. கொடுக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கையை மீறினால் 1மதிப்பெண் தலா ஒரு கூடுதல் பக்கத்திற்கு குறைக்கப்படும். அதிகபட்ச பக்க எண்ணிக்கை 30 ஆகும்.
4. கொடுக்கப்பட்ட உள்ளடக்கத்தை பின்பற்றாமலோ / தேவையற்ற உள்ளடக்கத்தை சேர்த்தாலோ 1 மதிப்பெண் குறைக்கப்படும்.

**5. குறிப்பிட்டுள்ள விதிகளை மீறுவது:**

- எழுத்து அளவு - லதா.
- ஒவ்வொரு தவறுக்கும் தலா 3 மதிப்பெண்கள்.
- தவறான எழுத்து அளவு :0.5 மதிப்பெண்கள் தலா ஒரு பக்கம்.
- தவறான இடைவெளி : 0.5 மதிப்பெண்கள் தலா ஒரு பக்கம்.
- தவறான நிறக்குறிப்பு (அட்டைப் பக்கம்) :2 மதிப்பெண்கள் ஒவ்வொரு வாதுரைக்கும்.

மனுதாரரின் வாதுரை மேல் அட்டை நீல நிறத்திலும், எதிர் மனுதாரரின் வாதுரை மேல் அட்டை சிகப்பு நிறத்திலும் இருக்க வேண்டும்.

**9. வாய்மொழிச்சுற்று வடிவம் மற்றும் மதிப்பிடும் முறை:**

**9.1. தகுதிச் சுற்று :**

தகுதிச் சுற்று இரண்டு சுற்றுகளாக நடத்தப்படும்.ஒவ்வொரு சுற்றிலும் அணிகள் வாதி / பிரதிவாதியாக வாதிடுவர்.

வாதி / பிரதிவாதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு அணிகளை ஒவ்வொரு அமர்வுகளில் குலுக்கல் முறையில் சந்திப்பர்.

ஒவ்வொரு சுற்றும் 40 நிமிடங்கள் கொண்டதாக நடத்தப்படும்.அதில் ஒவ்வொரு அணிக்கும் தலா 20 நிமிடங்கள் வழங்கப்படும்.இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்பு தெரிவிக்க / பதில் மறுப்பு தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். வாதாடும் பொருள் அடிப்படையில் கூடுதல் நிமிடங்கள் வழங்கப்படும்.இதனை நீதிமன்ற அலுவலகரிடம் முன்பே தெரிவித்திருக்க வேண்டும்.ஒவ்வொரு தகுதி சுற்றும் 2 நீதிபதிகளால் மதிப்பெண்கள் வழங்கப்படும். 2 தகுதி சுற்றுகளிலும் வெற்றி பெறும் அணிகள் ஒரு தோல்வி அடைந்திருந்தால் 2 தகுதி சுற்றுகளின் மொத்த மதிப்பெண்கள் ஆனது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஏதேனும் இரு அணிகள் நிகரான மதிப்பெண்களை பெற்றிருந்தால் வாதுரையின் மதிப்பெண்களானது கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

**9.2. கால் இறுதிச் சுற்று :**

தகுதி சுற்றில் முதல் 8 இடங்களைப் பிடித்த அணிகள் கால் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெறும்.எந்த அணிகள் வாதி, பிரதிவாதியாக வாதிட வேண்டும் என்பதை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, கால் இறுதிச் சுற்று நடைபெறும்.

ஒரு கால் இறுதிச் சுற்று மொத்தமாக 60 நிமிடங்கள் நடைபெறும்.அதில் ஒவ்வொரு அணிக்கும் 30 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்பு தெரிவிக்க / பதில் மறுப்பு தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். நேர மேலாண்மையினை கருத்தில் கொள்ளுதல் அணியின் அதிகாரத்திற்குட்பட்டதாயினும், ஒரு அணியில் வழக்காடுபவர் ஒருவருக்கு தலா 15 நிமிடங்களுக்கு மேல் வழக்கினை எடுத்துரைக்க அனுமதிக்க இயலாது. இதனை கால் இறுதி சுற்று நடைபெறும் முன்பே நீதிமன்ற அலுவலகரிடம் தெரிவித்திருக்க வேண்டும்.

காலிறுதிச்சுற்று இரு நடுவர்களால் மதிப்பீடு செய்யப்படும்.ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் 0-70 மதிப்பெண்கள் வரை கொடுக்கப்பெற்று, அதில் அதிக மதிப்பெண் பெரும் அணி அரை இறுதிக்கு செல்வார்கள்.

**9.3. அரை இறுதிச் சுற்று :**

முதலில் தேர்வாகும் 4 அணிகள் அரை இறுதி சுற்றிற்கு தேர்ந்தெடுக்கப்படும் வாதி / பிரதிவாதி யார் என்பதனை குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்படுவர்.

ஒவ்வொரு அரை இறுதிச் சுற்றும் 90 நிமிடங்கள் நடத்தப்படும்.இரு தரப்பிற்கும் 45 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்பு தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். நேர மேலாண்மையினை கருத்தில் கொள்ளுதல் அணியின் அதிகாரத்திற்குட்பட்டதாயினும், ஒரு அணியில் வழக்காடுபவர் ஒருவருக்கு தலா 15 நிமிடங்களுக்கு மேல் வழக்கினை எடுத்துரைக்க அனுமதிக்க இயலாது. இதனை அரை இறுதி சுற்று நடைபெறும் முன்பே நீதிமன்ற அலுவலரிடம் தெரிவித்திருக்க வேண்டும்.

அரை இறுதிச் சுற்றிற்கு இரண்டு நீதிபதிகள் கொண்டு தீர்ப்பு அளிக்கப்படும்.

ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் 0-70 மதிப்பெண்கள் வரை கொடுக்கப்பெற்று, இதில் எந்த அணி கூடுதல் மதிப்பெண்கள் பெறுகிறதோ அந்த அணி இறுதிச் சுற்றிற்கு தேர்வாகும்.

**9.4. இறுதிச் சுற்று :**

முதல் 2 அணிகளும் இறுதிச் சுற்றிற்கு தேர்ந்தெடுக்கப்படுவர். குலுக்கல் மூலமே வாதாடும் பக்கம் நிர்ணயம் செய்யப்படும்.

இறுதி சுற்று 90 நிமிடங்கள் நடத்தப்படும். இரு அணிகளுக்கும் தலா 45 நிமிடங்கள் வழங்கப்படும்.

இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்பு தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். நேர மேலாண்மையினை கருத்தில் கொள்ளுதல் அணியின் அதிகாரத்திற்குட்பட்டதாயினும், ஒரு அணியில் வழக்காடுபவர் ஒருவருக்கு தலா 20 நிமிடங்களுக்கு மேல் வழக்கினை எடுத்துரைக்க அனுமதிக்க இயலாது.

இறுதிச் சுற்றானது நீதிபதி குழுவால் மதிப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் 0-70 மதிப்பெண்கள் வழங்கப்படும். அதில் அதிகம் மதிப்பெண் பெற்ற அணியினர் வெற்றியாளாராக அறிவிக்கப்படுவார்கள்.

**9.5. வாய்வழி வாதங்களின் ஆணை வாய்வழி வரிசை பின்வருமாறு :**

வாதி 1

வாதி 2

பிரதிவாதி 1

பிரதிவாதி 2

வாதியின் மறுதொடக்கம்

பிரதிவாதியின் துணை மறுதளிப்பு

வழக்காடும் பொழுது, எந்தவொரு மாணவ வழக்கறிஞரும் தனது அடையாளத்தையோ அல்லது அவரின் கல்லூரியின் விவரங்களையோ வெளியிடக்கூடாது.

வாதி மறுப்புக்காக எழும்பவில்லை என்றால் பதில்-மறுப்பு ரத்து செய்யப்படுவதாக கருதப்படுகிறது.

தொகுப்புகள் மற்றும் வழக்குச் சட்டங்களை, அதிகாரிகள் நீதிபதிகளுக்கு கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும். நீதிமன்றம் தொடங்கபப்டுவதற்கு முன் தாக்கல் செய்யும் அனைத்து விதமான ஆவணங்களும் நீதிமன்ற அதிகாரியால் கட்டாயமாக சரி பார்க்கப்படும். எந்த விதத்திலும் தங்களின் கல்லூரியின் பெயரை வெளிப்படுத்துவது மற்றும் அதன் சுருக்க சொற்களை உள்ளடக்கியது தொடர்பான ஆவணங்களை நீதிபதிகளுக்கு முன் சமர்ப்பிக்க அனுமதிக்க இயலாது.

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

**9.6. வாய்வழி வழக்காடும் மதிப்பெண்கள் :**

மாணவ வழக்குரைஞரின் வாய்வழி வழக்காடும் திறனை 0-70 மதிப்பெண்கள் அளவில் பின்வருமாறு மதிப்பிடுவர்.

| **வ.எண்** | **தகுதி** | **மதிப்பெண்கள்** |
|---|---|---|
| 1. | கேள்விகளுக்கு பதில் அளித்தல் | 15 |
| 2. | நீதிமன்ற அறை நடத்தை | 10 |
| 3. | பொருண்மைகளின் தெளிவு | 5 |
| 4. | சட்டத்தின் அறிவு | 10 |
| 5. | நேர பகுப்பாய்வு | 5 |
| 6. | சட்ட பகுப்பாய்வு (சட்டச் சொற்கள், சட்ட முதுமொழி, சட்ட கோட்பாடுகள் பயன்படுத்தும் திறன்) | 15 |
| 7. | விவாதத்தின் திறன் | 10 |
| | **மொத்தம் மதிப்பெண்கள்** | 70 |

**10. இதர :**

நீதிமன்றம் தொடர்பான விதிகளை நடைமுறை படுத்துதல் மற்றும் பொருள் விளக்கம் தொடர்பான இறுதி முடிவு ஒருங்கிணைப்பாளர் குழுவின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும்.

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

**நிகழ்ச்சி**

| நிகழ்ச்சி | தேதி |
|---|---|
| முன்பதிவு செய்ய கடைசி நாள் | 14 - பிப்ரவரி- 2020 |
| இதர தகவல்களுக்கான கடைசி நாள் | 18 - பிப்ரவரி- 2020 |
| வாதுரை சமர்ப்பிக் கடைசி நாள் | 24 - பிப்ரவரி- 2020 |
| சிறந்த ஆராய்ச்சியாளர்க்கான தேர்வு | 28 - பிப்ரவரி- 2020 |
| தகுதிச் சுற்று மற்றும் காலிறுதிச்சுற்று | 29 - பிப்ரவரி- 2020 |
| அரையிறுதி மற்றும் இறுதிச்சுற்று | 01 - மார்ச்- 2020 |

முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி

மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை

## விருது

| பரிசு | பரிசுத்தொகை |
|---|---|
| முதல் பரிசு | ரூ.20,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ.12,000/- |
| சிறந்த மாணவ வழக்குரைஞர் | ரூ.4,000/- |
| சிறந்த ஆராய்ச்சியாளர் | ரூ.4,000/- |
| சிறந்த வாதுரை | ரூ.4,000/- |

## தொடர்புக்கான மின்னஞ்சல் முகவரி

மின்னஞ்சல்முகவரி :**tamilmcc@srmist.edu.in**

## ஒருங்கிணைப்பாளர்

1. திருமதி.க.பவானி உதவி பேராசிரியர்
2. திரு.மகாலிங்கம் உதவி பேராசிரியர்

## இணைஒருங்கிணைப்பாளர்கள்

1. திருமதி.சாந்தி பழனி உதவி பேராசிரியர்
2. திருமதி.தேவி உதவி பேராசிரியர்
3. செல்வி. ஆத்மரூபாவதி உதவி பேராசிரியர்
4. திரு. பெனட் பால் கிப்ட்சன் உதவி பேராசிரியர்
5. திருமதி. புவனேஷ்வரி உதவி பேராசிரியர்
6. திருமதி. கீர்த்தி உதவி பேராசிரியர்
7. செல்வி. லோகப்பிரியா உதவி பேராசிரியர்

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

## <u>தகவல்கள்</u>


1. **திருமதி.க.பவானி உதவி பேராசிரியர் - 9940617319**
2. **திருமதி.சாந்தி பழனி உதவி பேராசிரியர் - 9500141373**
3. **திரு.பெனட்பால் கிப்ட்சன் உதவி பேராசிரியர் - 9677977133**
4. **செல்வி.ஆத்மரூபாவதி உதவி பேராசிரியர் - 9600931478**

**மின்னஞ்சல்முகவரி :tamilmcc@srmist.edu.in**

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

# <u>பதிவுப்படிவம்</u>

தேதி...............................

**கல்லூரியின் விவரம்** :

கல்லூரி பெயர் :

முகவரி :

தொடர்புக்கான ஆசிரியர் பெயர் :

தொடர்பு எண் :

மின்னஞ்சல் முகவரி :

**முதல் மாணவ வழக்குரைஞர்** :

பெயர் :

பயிலும் ஆண்டு :

தொடர்பு எண் :

மின்னஞ்சல் முகவரி :

**புகைப்படம்**

**இரண்டாம் மாணவ வழக்குரைஞர்** :

பெயர் :

பயிலும் ஆண்டு :

தொடர்பு எண் :

மின்னஞ்சல் முகவரி :

**புகைப்படம்**

**முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி**

**மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை**

**ஆராய்ச்சியாளர் விவரம்** :

| | |
|---|---|
| பெயர் | : |
| பயிலும் ஆண்டு | : |
| தொடர்பு எண் | : |
| மின்னஞ்சல் முகவரி | : |

**புகைப்படம்**

**உறுதிமொழி**

பதிவுப்படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விவரங்களும் உண்மையானவை. பதிவுசெய்த கல்லூரி மற்றும் மாணவர்கள் கூறப்பட்ட விதிமுறைகளை போட்டியின் கடைசி வரை கடைபிடிப்போம்.

**முதல் மாணவ வழக்குரைஞர் கையொப்பம்**

**இரண்டாம் மாணவ வழக்குரைஞர் கையொப்பம்**

**ஆராய்ச்சியாளர் கையொப்பம்**

**ஆசிரியர் பொறுப்பாளர் கையொப்பம்**

**கல்லூரி முதல்வரின் கையொப்பம் மற்றும் முத்திரை**

முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாத போட்டி

மாதம் 28 - பிப்ரவரி - 2020 முதல் 01 - மார்ச் - 2020 வரை

## போக்குவரத்து படிவம்

| | |
|---|---|
| கல்லூரியின் பெயர் | |
| போக்குவரத்து | |
| வருகை நேரம் | |
| புறப்படும் நேரம் | |
| தங்குமிடம் | தேவை / தேவையில்லை |
| இதர தவல்கள் | |

SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

**தலைமை புரவலர்**

முனைவர் T R பாரிவேந்தர், நிறுவனர், வேந்தர்

எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்

**புரவலர்கள்**

திரு P ரவி பச்சமுத்து, இணைவேந்தர் (நிர்வாகம்)

எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்

முனைவர் R P சத்திய நாராயணன், இணைவேந்தர் (கல்வி)

எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்

முனைவர் R சிவகுமார்,

துணை தலைவர்

எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்

முனைவர் சந்தீப் சஞ்செட்டி

துணைவேந்தர்

எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்

**இணை புரவலர்கள்**

முனைவர் T P கணேசன்

இணை துணைவேந்தர்

(திட்டம் மற்றும் வளர்ச்சி)

முனைவர் பாலசுப்ரமணியன்

இணை துணைவேந்தர்

(வெளியுறவு தொடர்பு)

எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்

முனைவர் N சேதுராமன்

பதிவாளர்

எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்